**FIRST INFORMATION REPORT**
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

Under section 173 BNSS

C 8167271

1. District மாவட்டம் : கடலூர் PS: காவல்நிலையம் ஊ.த.க. பிரிவு Year: ஆண்டு 2025 FIR No.: மு.த.அ. எண் 3/2025 Date: நாள் 21.04.2025

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: 1988 as amended by The Prevention Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் 17.04.2025 Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from நேரம் முதல் : 16.00 hrs Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 21.04.2025 Time நேரம் : 0700 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol - I Time நேரம் : 0700 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினி தட்டச்சு புகார் மனு

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் சுமார் 55 கி.மீ. தென்மேற்கு.
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி உதவி மின் பொறியாளர் அலுவலகம், சேத்தியாதாப்பு தெற்கு பிரிவு.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : -- District : --
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M.சசிதரன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் மணி
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 32 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் --- Place of Issue : வழங்கப்பட்ட இடம் ---
(f) Occupation : தொழில் மேலாளர் (g) Address : முகவரி நெ.64, காமராஜ் நகர், மஞ்சக்குப்பம், கடலூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

அம்பேத்கர், உதவி மின் பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், இயக்குதலும் பராமரித்தலும், தெற்கு பிரிவு, சேத்தியாதோப்பு.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

வாதியால் தாமதம்.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்துசமர்ப்பிக்கப்படுகிறது :</u>

நான் இன்று 21.04.2025 ஆம் தேதி காலை 07.00 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தின் அலுவலலில் இருந்தபோது, நிலையம் ஆஜர் செய்த கடலூர் மஞ்சக்குப்பம், நெ.64, காமராஜ் நகர் என்ற முகவரியைச் சேர்ந்த மணி என்பவரது மகன் திரு.M.சரிதரன் என்பவர் நிலையம் ஆஜராகி கணினி தட்டச்சு புகார்மனு ஒன்றினை பொடுத்துக்கொண்டான் அதன் விவரம் பின்வருமாறு : அனுப்புநர் M.சசிதரன், (வயது 32) த/பெ. மணி, நெ.64, காமராஜ் நகர், மஞ்சக்குப்பம், கடலூர். கைபேசி : 6380759287. பெறுநர், காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும்

(தொடர்ச்சி பக்கம் –3)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………….. Rank ………………….. to take up the Investigation / Refused Investigation / transferred to PS…………………………………………..on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் சா. திருவேங்கடம் பதவி காவல் ஆய்வாளர் நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ஊ.த.க பிரிவு கடலூர் காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு
[signature] 21/04/2025

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[signature] 21/4/2025

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

21-4-2025 at 09.15 hrs.

Name: பெயர் சா. திருவேங்கடம்,
Rank: நிலை …………………No. எண் ……….
காவல் ஆய்வாளர்,
ஊ.த.க பிரிவு, கடலூர்.

கண்காணிப்புத் துறை, கடலூர். ஐயா, நான் கடலூர், மஞ்சக்குப்பம், நெ.64, காமராஜ் நகர் என்ற முகவரியில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் சிதம்பரத்தில் இயங்கிவரும் KS Info Tech என்ற Solar & CCTV Installation Company–யில் Manager ஆக உள்ளேன். எங்களது நிறுவனம் Ministry of New and Renewable Energy (MNRE)–ன் கீழ் Solar Panel அமைக்கும் நிறுவனங்களில் ஒன்றாகும். திரு.மருதப்பன், நெ.230, கிழக்கு தெரு, நங்குடி, புவனகிரி தாலுக்கா, கடலூர் மாவட்டம் என்பவர் PM Surya Ghar Muft Bijli Yojana திட்டத்தின் கீழ் Bank of India வங்கி கடன் மூலம் சூரிய ஒளி மின் உற்பத்தி அமைப்பு (Solar on grid System) அமைக்க உரிய ஆவணங்கள் கொண்டு 25.02.2025 ஆம் தேதி தேசிய இணையதளத்தில் விண்ணப்பம் செய்து, சூரிய ஒளி மின் உற்பத்தி அமைப்பை நிறுவ எங்கள் நிறுவனத்தை தேர்ந்தெடுத்துள்ளார். அதனை தொடர்ந்து திரு.மருதப்பன் அவர்கள் என்னை தொடர்புகொண்டார். அதன்பிறகு அவர் வீட்டிற்கு சூரிய ஒளி மின் உற்பத்தி அமைப்பு ஏற்படுத்தி கொடுக்க எங்கள் கம்பெனியுடன் ஒப்பந்தம் செய்துகொண்டார். இதன் மொத்த திட்ட மதிப்பீடு ரூ.2,20,000/– ஆகும். எங்கள் KS Info Tech என்ற கம்பெணியின் வங்கி கணக்கிற்கு ரூ.2,20,000/–த்தை திரு.மருதப்பன் சார்பாக வங்கி செலுத்தியுள்ளது. பின்னர் அவர் என்னிடம் அவருக்கு பல்வேறு பணிகள் இருப்பதால் அவர் சார்பாக இணையதளத்தில் பதிவேற்றம் செய்யும் பணிகள் மற்றும் மின் வாரிய அலுவலகம் சார்ந்த அனைத்து பணிகளையும் என்னையே மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார். சரி என்று ஒப்புக்கொண்ட பின்னர் நான் அவரது வீட்டில் சூரிய ஒளியில் மின் உற்பத்தி அமைப்பை நல்லமுறையில் செய்து முடித்தேன். பின்னர் மின்வாரியத்தால் பொருத்தப்பட வேண்டிய Bi–directional meter பொருத்துவதற்காக தேவையான ஆவணங்களை தேசிய இணையதளத்தில் 19.03.2025 ஆம் தேதி பதிவேற்றம் செய்தேன். அதன் நகல்களை சம்மந்தப்பட்ட மின்வாரிய அலுவலகமான உதவி

21/4/2025
காவல் ஆய்வாளர்,
ஊ.த.க. பிரிவு கடலூர்.

மின் பொறியாளர் அலுவலகம், தமிழ்நாடு மின் உற்பத்தி (மற்றும்) பகிர்மான கழகம், இயக்குதலும், பராமரித்தலும், தெற்கு பிரிவு, சேத்தியாதோப்பு அலுவலகத்தில் நான் கொடுத்துக்கொண்டேன். பின்னர் 15.04.2025 ஆம் தேதி மின்வாரியம் சார்பாக புல தணிக்கை மேற்கொள்ளப்பட்டுவிட்டதாக திரு.மருதப்பன் கைபேசிக்கு குறுஞ்செய்தி வந்தது. திரு.மருதப்பன் வீட்டிற்கு Bi–directional meter பொறுத்தப்படாமல் இருந்துவந்த நிலையில், நான் கடந்த 17.04.2025 ஆம் தேதி மாலை சுமார் 4.00 மணிக்கு உதவி பொறியாளர், சேத்தியாதோப்பு தெற்கு பிரிவு மின் வாரிய அலுவலகத்திற்கு சென்று அங்கு பணியில் இருந்த உதவி மின் பொறியாளர் திரு.அம்பேத்கர் என்பவரை சந்தித்து பயனாளி திரு.மருதப்பன் என்பவருக்கு Bi–directional meter பொருத்துமாறு கேட்டபோது, அவர் ரூ.2,000/– கொடுங்க உடனே மீட்டர் பொருத்திடலாம் என்று சொன்னார். அதற்கு நான் அவரிடம் அரசாங்கத்திற்கு செலுத்தவேண்டிய பணம் இணையதளம் மூலம் செலுத்தப்பட்டுவிட்டது என்று கூறி அதற்குண்டான இணையதள இரசீதினை அவரிடம் காண்பித்தேன். அதனை வாங்கி பார்த்துவிட்டு இது அரசுக்கு சேரவேண்டிய பணம், நான் கேட்கும் பணம் எனக்கு சேரவேண்டியது என்று கூறினார். மேலும் அவர் என்னிடம் நான் கேட்ட பணம் ரூ.2,000/– கொடுக்கலான இப்போதைக்கு மீட்டர் பொருத்தப்படமாட்டாது என்று கறாராக கூறினார். நான் அவரிடம் பயனாளி திரு.மருதப்பன் மற்றும் கம்பெனி உரிமையாளரிடம் கேட்டு சொல்கிறேன் என்று சொன்னேன். அதற்கு அவர் என்னிடம் பயனாளி தரமாட்டார், நீங்கள்தான் பணத்தை தரவேண்டும் என்று சொன்னார். மேலும் தொடர்ந்து மீட்டர் பொருத்தும் பணி சம்மந்தமாக என்னிடம் நீங்கள் வரவேண்டியிருக்கும் அதனால் நான் கேட்கும் பணம் ரூ.2000/–த்தை கொடுத்து வேலைய முடித்துவிட்டு போங்க என்று சொன்னார். அதற்கு நான் அவரிடம் இது சம்மந்தமாக கலந்துபேசிவிட்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டு அங்கிருந்து வந்துவிட்டேன். பின்னர் இது சம்மந்தமாக நான் கம்பெனி

அ.தி[illegible]
21/4/2025
காவல் ஆய்வாளர்,
ஊ.த.க பிரிவு, கடலூர்.

உரிமையாளர் திரு.நந்துகிஷோர் அவர்களிடம் கலந்துபேசினேன். அவருக்கு லஞ்சம் கொடுத்து Bi–directional meter பொருத்துவதற்கு விருப்பமில்லை என்று சொன்னார். பின்னர் உதவி மின் பொறியாளர் Bi–directional meter பொருத்துவதற்கு ரூ.2,000/– லஞ்சப்பணம் கேட்கும் விவரத்தினை பயனாளி திரு.மருதப்பனிடம் சொன்னேன். அதற்கு அவர் லஞ்சம் கொடுத்து Bi–directional meter பெறுவதற்கு விருப்பமில்லை என்றும் நான்தான் ஏற்கனவே உங்களிடம் பொருப்பை ஒப்படைத்துள்ளேன் என்றும், லஞ்சம் கேட்ட அதிகாரி மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யுங்கள் என்றும் வேலை முடிந்தபின்னர் பேசிக்கொள்ளலாம் என்று சொன்னார். மேலும், எனக்கும் லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை. எனக்கு CCTV பொருத்தும் பணி இருந்ததால் என்னால் உடனடியாக வந்து புகார் கொடுக்க இயலவில்லை. அதனால் இன்று பயனாளி திரு.மருதப்பன் அவர்கள் வீட்டிற்கு Bi–directional meter பொறுத்துவதற்கு என்னிடம் ரூ.2,000/– லஞ்சப்பணம் கேட்ட சேத்தியாதோப்பு மின்வாரிய உதவி மின் பொறியாளர் திரு.அம்பேத்கர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டி புகார்மனு கொடுக்கிறேன். மேலும், திரு.அம்பேத்கர் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.2,000/– த்தை கொண்டுவந்துள்ளேன். நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு ஒப்பம் (xxxxx) 21/04/2025.

Submitted, Received the above computer typed complaint on 21.04.2025 at about 07.00 hrs., a quiet and quick verification of the general reputation of the Public Servant complained against was made through sources and found to be genuine. The integrity and antecedents of the accused were also verified through sources and found to be bad. Hence, I registered a case in Cuddalore Vigilance and Anti-Corruption in Cr.No.3/2025, U/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 on 21.04.2025 at 08.30 hrs., sd/-xxxxx

அ.கி[illegible] 21/4/2025

காவல் ஆய்வாளர்,

ஊ.த.க பிரிவு, கடலூர்.

21/04/2025 (S.THIRUVANGADAM), Inspector of Police, V & AC, Cuddalore.

இதன் அசலை வாதியின் புகார் மனுவுடன் இணைத்து கனம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி ஊழல் தடுப்பு வழக்குகள் நீதிமன்றம் அவர்களுக்கும், இதர நகல்களை உரிய அதிகாரிகளுக்கும் பணிந்து சமர்ப்பிக்கிறேன்.

சு. தி
21/4/2025

(S.THIRUVANGADAM),
Inspector of Police,
V & AC, Cuddalore.